உ

கணபதி துணை

732
294.554

கருடப்பத்து

மூலமும் உரையும்.

இஃது

பாலக்காடு—கல்பாத்தி

வி—வெங்கடாசல சாஸ்திரிகளால்

பார்வையிடப்பட்டு

தமது

வித்தியாகல்பதரு

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது

ஆனந்த௵

1914

இதன் விலை அணா 2.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம.

OFFICE OF THE
11
M

கருடப்பத்து—மூலமும் உரையும்

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தேவாதிதேவர்பலர்யாதுளதுதிருநாமமோதுதிருவான்
மூவாதி மூலருலகோடேயேழுமரசாளுமேன்மை முதல்
வா, மேவாதியின்பமவைமேவுமேவிநெடுவீடுகண்டுமுடி
யா, தாவாய்பரிந்தேயமூவாய் கொல்யாருனதிரேகமாய்
கையறிவார்.

ஸ்வாமிராமபத்திரா தேவாதிகளென்று சொல்லப்பட்டமுப்பத்
துமுக்கோடிதேவாதிகள் நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகள்அஷ்
டவசுக்கள் கின்னரர்-கிம்புருடர்—கருடகாந்தருவர் சித்தியாவித்தியாத
ரர் தும்புருநாரதரென்றுசொல்லப்பட்ட தேவாதிகட்கும் அறுபதாயி
ரங்கோடி அசுராதிகட்கும் இந்திரன்—அக்கினி-இயமம்-நிருதி-வரு
ணன்-வாயு-குபேரன்-ஈசான்யன் என்றுசொல்லப்பட்ட அஷ்டதிக்கு
ப்பாலகர்க்கும் தாத்துருசக்கரன் அறியமன்மித்திரன் வருணன்அஞ்
சுமான் இரணியன்பகவான் திவச்சுவான் பூடன்சவித்துருதுவட்டன்
என்றுசொல்லப்பட்ட துவாதசாதித்தருக்கும் ஞாயிறு-திங்கள்-செவ்
வாய்—புதன்—வியாழம்—வெள்ளி—சனி—இராகு—கேது—என்று சொல்ல
ப்பட்ட நவக்கிரகங்களுக்கும் மேஷம்ரிஷபம் மிதுனம் கடகம் சிங்கம்
கன்னி துலாம் விருச்சிகம் தனுசு மகரம்கும்பம் மீனம்என்றுசொல்லப்
பட்ட பன்னிரண்டுராசிகட்கும் பதினொருகோடி உருத்திரருக்கும்எ
ட்டுகோடிவைரவர்கட்கும் நவகோடிசத்திகட்கும் ஐநதுகோடிஇந்திரக
ணங்கட்கும் ஆறுகோடிபிரமகணங்கட்கும் பதினொருகோடி சிவகண
ங்கட்கும் பன்னிரண்டுகோடிபூதகணங்களுக்கும் மூன்றுகோடிபத்தி
ரகணங்கட்கும் மூன்றுகொடிசுததன்மாரகட்கும் மகாகணபதிக்கும்சி
வசுப்பிரமணியருக்கும் பதினாறுநூறுயிர தேவர்கட்கும் ஒன்பதுநூ
றுயிரமானிடவர்க்கங்கட்கும் பதினொருநூறுயிர மிருகவர்க்கங்கட்கும்
பதினொருநூறுயிரபட்சிவர்க்கங்கட்கும் பதினொருநூறுயிரஜலசெந்து
க்களுக்கும் பதினொருநூறுயிரம் ஊவனங்கட்கும் பதினெண்ணூறுயி
ரந்தாபரங்கட்கும் இப்படி அண்டசம்ஸ்வேதம் உப்பிசம் சராசரமென்
றுசொல்லப்பட்ட நால்வகையோனியில் எழுவகைதோற்றமாகியஎன்
பத்துநாநூறுயிர சீவஜெந்துக்களுக்கும் எல்லாவற்றிற்கும்நீர் ஆதிதெ
ய்வம் ஆதிவேதம் ஆதிமூலம்ஆதிபௌதிகம்ஆதிநாதம்ஆதிபூதிகம் ஆ

திரீதிகம் ஆதிவிவிதம்ஆதிமகாரகாமியம்ஆதியதகயான்மீமென்றுசொல்லப்பட்டபத்துவகைஞான ரூபமாய் பராபரவஸ்துவாய்நிஷ்கள நீர்மலநிராதர தற்சொரூபபிரகாசனாகக்கொண்டு எள்ளுக்குள் எண்ணெய்போலவும் ஜலத்தில்சீதளம்போலவும் பாவிலேநெய்போல்வும் பூவிலேமணம்போலவும் அக்கினியிலே உஷ்ணம்போலவும் மணியிலேஓசைபோலவும் சொல்லிலேபொருட்போலவும் இரத்தினத்திலேபிரகாசம்போலவும் வித்திலேமுளையைப்போலவும் மேகத்திலேமின்னலைப்போலவும்கண்ணுக்குள் ஒளிபோலவும் கரும்பிலேமதுரம்போலவும் இருந்துமிராமலும் கண்டுங்காணாமலும் எங்கும்நிரஞ்சனமாயிருக்கிறவராய் முற்சொன்ன அமரர்சித்தர் அசுரர்தைத்தியர் கருடர்கின்னரர்நிருதர்கிம்புருடர்காந்தருவர் விஞ்சையர்பூதர்பைசாசர் அந்தரர் முனிவர்போகபூமியர் ஆகாயவாசிகள்உரகர் என்றுசொல்லப்பட்டபற் பலதேவாதிகளும் பறபலமூவாதிகளும் பற்பலமகாரிஷிகளும்பற்பல மகாஞானிகளும் பற்பலயோகிகளும் பற்பலபோகிகள் பற்பலகாமிகள் பற்பல வர்மிகள் பற்பலதத்துவாதிகள் பற்பலவித்தியாதிகள்பற்பல பூதரும்பற்பலவாதரும் பற்பலமாந்தரும் பற்பலவேந்தரும் பற்பலயசுரரும் பற்பல அசுரரும் பற்பலகின்னரரும் பற்பலபன்னரும்பற்பலசாத்திரரும் பற்பலசூத்திரரும் பற்பலஇந்திரரும் பற்பலமந்திரரும் இப்படி சொல்லப்பட்டபேர்களெல்லாம் சரியைகிரியையோகம் ஞானமென்றும் நாலுதொழில்வேணுமென்றும் சாலோகசாமீபசாரூப சாயுச்சியமென்றநாலுபதவிவேணுமென்றும் தர்மார்த்தம் கற்மார்த்தம்வேணுமென்றும் புத்திரமித்திரகளத்திராதிகள்வேணுமென்று அக்ஷரவித்தைவேணுமென்றும்அஷ்டாங்கயோகம்வேணுமென்றும அஷ்டாங்கபோக துரந்தரீகம்வேணுமென்றும் அஷ்டகலியாணசுயம் வேணுமென்றும் அஷ்டாங்கமோகினிபோகம்வேணுமென்றும் அஷ்டலட்சுமிகடாட்சம்வேணுமென்றும் ஒவ்வொருஆசாபாசங்களிலே யகப்பட்டு இஷ்டகாமியார்த்தங்கிடைக்கவேணுமென்றும் ஏகாட்சரம்திரியாட்சரம் பஞ்சாட்சரம் வேதபஞ்சாட்சரம் தனபஞ்சாட்சரம் கருடபஞ்சாட்சரம் தத்துவபஞ்சாட்சரம்நமசிவாயமாகவும்அன்றியுந்தன்வாட்சரமாகியசிவபீஜம் தேவிபீஜம் அவற்றுள்சிவபீஜமாகிய (மூலம்ஓங்காரமாகவும்) பிரமாநகாரமாகவும் விஷ்ணுமகாரமாகவும் உருத்திரன்சிகாரமாகவும் மயேசுவரன் வகாரமாகவும் சதாசிவன்யகாரமாகவும் தேவிபீஜமாகிய (வல்லபைறீயாகவும்) சரசுவதிஐயாகவும் இலட்சுமிகிலீயாகவும் உருத்திரிசௌவாகவும் மயேசுவரிஸ்ரீயாகவும் மனோன்மணிறீஓம் ஆகவும் அன்றியும்உச்சியில்சௌகாரங்கூகாரமாகவும் நெற்றியில்ளகாரமாகவும் வலக்கண்இகரமாகவும் இடக்கண்றீயாகவும் வலதுசெவிமுகாரம் இடதுசெவிநுகாரம் வலதுமூக்குருகாரம் வலக்கன்னம்லுகாரம் இடக்கன்னம்லூகாரம் மே

லதரம்ளகாரம் கீழதரம்ஐகாரம் மேற்றசனம்ஒகாரம்கீழ்த்தசனம் ஒகாரப்
பிடரி அகாரங்கண்டம் மகாரங்கந்தரக்குழிசகாரம்வலக்கை க—க—க—க வ
லக்கைவிரல் நு—நு-நு—நு—நு இடக்கை—ச—ச—ச—ச—இடக்கைவிரல்-ஒ
ஒ—ஒ—ஒ-ஒ வலமுலைவகாரம் இடமுலைசகாரம் மார்புநடுசகாரம் குலைபெக
ரம்வயிறுபேகாரம் உந்திமகாரம்வலதுவிலாபகாரம் இடவிலாபாகாரம் இ
லிங்கம்யகாரம் மூலம்லகாரம் குதம்லாகாரம் வலக்கால் டடடட வலக்கா
ல்விரல் ணணணண இடக்கால தததத இடக்கால்விரல் நநநநஇவ்வித
தத்வாசரகாகவும் ஞானபஞ்சாட்சரம் சத்திபஞ்சாட்சரம் பஞ்ச தாசட்
ரசந்துவாதசாட்சரம் இவைமுதலானஏழுகோடிமகா மந்திரங்களெல்
லாஞ்சிவப்பிரகாசமாகக்கொண்டிருக்கின்ற உம்முடையசகஸ்திர நாம
ங்களையும் உம்முடையதிருமூலமந்திரமான திருவஷ்டாட்சரங்களையும்
வாயினாலோதி மனதிலேயுச்சரித்து நாராயணனே பிரமமென்றறிந்து
உமக்குப்பிரீதிவரத்தக்கதாகசரிதையாசரிதைசரிதையாகிரியைசரிதை
யாயோகஞ்சரிதையாஞானங்கிரியையா சரிதைகிரியையாகிரியை கிரி
யையாயோகங்கிரியையாஞானம் யோகசரிதையோகாகிரியை யோகா
யோகம் யோகாஞானம் ஞானசரிதைஞானகிரியை ஞானயோகம் ஞா
னஞானம்இப்படிசொல்லப்பட்ட சோடபூசாவிதிகளிலே ஜலாந்தபுட்
பதூபநைவேத்தியங்களைக்கொடுத்து அறுசுவைகளிலேகைப்புப் புளி
ப்புகடுகு நல்லெண்ணை கட்கொலைகாமங்களையும்நீர்த்தூளிப்பட வுகறி
நித்திரையற்று சற்குருமுகாந்தரத்தில் சிக்குவைதீட்சைப்பெற்றுஆத
னம்பிராணாபம் பிரத்தியாகாரந்தாரணைதியானஞ்சமாதிஎன்ற அஷ்டா
ங்கயோகஙகளிலேயுரைத்து கேசகிரிகோமுகஞ்சுவஞ்சுவத்திகம் பத்ம
ம்பத்திரம்மயூரம் முத்தம்வீரமென்றுசொல்லப்பட்ட வாதனங்களில்
பத்மாசனத்திலிருந்து வீரவைராக்கியமாக மூலாதாரஞ் சுவாதிஷ்டா
னம்மணிபூரகம் அநாகதம்விசித்தி ஆஞ்ஞையென்கிற சடாட்சரங்களை
இடம்வலம்நடுவாகக்கலந்து நிற்கின்றசாரமாகிய இடகலைபிங்கலைசுழிமு
னையென்கிற மூன்றுநாடியையுங்கூட்டுபிரணவாதீதமாக மேற்றமரித்
புகுந்துஆறுதாரத்தையடைந்து சந்திரபுட்பகரணிதீர்த்த விலாசவெ
ளியில் நெருப்பாறுமயிர்ப்பாலங்கடந்து இரேசகபூரக்கும்பகமாய் அறு
பத்துநாலங்குலமழுத்தி சந்திரமண்டலத்தைமுட்டிமதியமிர்த பிரமா
ந்தரமான பிடரிவழிக்குட்செலுத்தி .வழலையென்ற பிரமசற்பமுண்டு
வஜ்ரதங்கதேகமாக்கி நெடுநாளிவ்வுலகத்திலிருந்துமனமடங்குதரிசன
ம்விந்துதரிசனம் மகதெரிசனம் அரூபதரிசனம் பரமவெளிதரிசனம்
ஆதாரதரிசனம் அறிவினதரிசனம் ஆத்மதரிசனம் உருவதரிசனம்உள்
ளத்தரிசனம் ஒளிதரிசனம்கைலாசகாட்சி நாசிநுனிதரிசனமீநாததரி
சனம் நம்புருவமையதரிசனம் பூரணதரிசனம் இச்சோடசதரினத்தில்
துவாதசாந்தவெளியில் ஞானக்கண்ணினாலே உம்மைக்கண்டுணர்ந்த

பெரியோர்களுமும்முடைய திருமூலாஷடாட்சரங்களை செபித்து மர்யாசம்பன்னதத்துவசம்பன்ன யோகினிஜாலம் மாலினிவித்தை செகன்மோகனம்மனோபேதம் குய்யதந்திரம் கலாவாதமகலாசாரம்குன்றிலாமிர்தம்அஞ்சனவித்தைபாதுகை பானபாத்திரம் ஆகாசப்பிரவேசம் சரகாயப்பிரவேசம்இரசவாதம் அக்கரவிலக்கணம் ·இலிகிதம் கணிதம் வேதம்புராணம் வியாகரணம் நீதிசாத்திரம்சோதிடசாத்திரம் தருமசாத்திரம்யோகசாத்திரம் மந்திரசாத்திரம் சகுனசாத்திரம்சிற்பசாத்திரம் ஆயுர்வேதம்உருவசாத்திரம இதிகாயம்காவியம் அலங்காரம்மதுரபாடனம்சத்தப்பிரம்மம்நிருத்தம்நாடகம்·தாளம்மிருதங்கம் வேணுவீணை இரத்தினபரீட்சை பூமிபரீட்சை அசுவபரீட்சை கஜபரீட்சைஇரதபரீட்சை கனகபட்சை அஸ்திரபரீட்சை மல்லயுத்தஞ் சங்கிருமவிலக்கணம் ஆக்ருஷ்ணம் உச்சாடனம்விதவேஷ்ணம் தம்பனம்பேதனம்மாரணம்மோகனம் வசியம் மதனசாத்திரம் காந்தருவவாதம் பைபீலவாதம் கவுத்துகவாதம்தாதுவாம் நட்டம்முட்டி ஆகாயகமனம் அதிரிசயம் அக்கினிஸ்தம்பம் ஜலஸ்தம்பம் வாயுஸ்தம்பம் திருஷ்டிஸ்தம்பம் வாக்குஸ்தம்பம் சுக்கிலஸ்தம்பம கன்னஸ்தம்பம் கடகஸ்தம்பம் அவத்தைப்பிரயோகம் இராசவசியம் ஸ்ரீவசியம் வருஷவசியம் மிருகவசியம் பூதவசியம் உலோகவசியம் பூக்கம்பம்கிரிக்கம்பம இடிவிலக்குவினோதம் விருக்ஷவினோதம் விஷாமிர்தம் மஹாமாய்கைசத்திசாதனம் மோகினிபோகம்வருணவித்தை வெகுரூபம்பிரியாதிருத்தல் காரூடவித்தை தேவதரிசனம் அணிமாமகிமாகரிமா இலகிமா பிராத்திபிராகாமியம் இசத்துவம் வசத்துவம் இந்திரஜாலம் மகேந்திரசாலம் கஜகாணங்கோகநணம் இப்படிசொல்லப்பட்ட அறுபத்துநாற்கலைக்ஞானங்களும் அநந்தகோடாகோடிவித்தைகளைக்கற்று சித்திபுத்திமுத்திவெற்றுப்பெற்றும் உலகத்திலேசித்தர்கள் சித்துவிளையாடுகிறதும் பிரமசாரிசன்னியாசிவானப்பிரஸ்தன்கிரதனென்ற நாலுவருணாச்சிரமங்களில் ஒவ்வொருத்தர்நிற்கிறதும் பிரமக்ஷத்திரயவைசியசூத்திரர் அவரவர் தங்கள்தங்கள் நிலையிலேயிருக்கிறதும் அஷ்டபோகதுரந்தரீகாரகிறதும் மஹாராஜமகுடவர்த்தன நவரத்தினசிம்மாசனப்பதிகளாகிறது சத்தியவாசகராகிறதும் வித்தியாவினோதராகிறதும் சிற்சிலபேர்சீவன் முத்திபெற்றிருக்கிறதுஞ் சிலர் தேகசித்திப்பெற்றிருக்கிறதும் இந்திரன்சுவர்க்கத்திலிருக்கிறதும் பிரமாசத்தியலோகத்திலிருக்கிறதும் ருத்திரன்கைலாசத்திலிருக்கிறதும் காலங்களிலேசர்வசங்காரஞ் செய்கிறதும்அஷ்டதிக்குப்பாலகரிருக்கிறதும் அட்டகஜங்களிருக்கிறதும் அஷ்டநாகங்களிருக்கிறதும் அஷ்டகுலபர்வதங்களிருக்கிறதும் சத்தசமுத்திரங்கரைகடவாமல்நிற்கிறதும் மஹாமேருகிரிபூமண்டலத்துக்கு அஞ்சுருவாணியாய்நிற்கிறதும் சந்திராதித்தர் உதயஸ்தமாகிறது காலாகாலங் களி

லேமேகம்வருஷிக்கிறதும் கந்தமூலபதாதிகள் பலதானியங்கள்வர்த்திக்கிறதும் அவைகளைப்புசித்து அநந்தங்கோடிசீவாத்துமாக்கள்வர்த்திக்கிறதும் இப்படிசொல்லப்பட்டவையெல்லாம் தேவரீருடைய கற்பனையினாலேவந்ததல்லாமல் மற்றொருத்தருடைய கர்த்தத்துவத்தினாலேயல்லவே இப்படிவந்தது.

இப்பிரபஞ்சத்தைரக்ஷித்து நீரெப்படியிருக்கிறீரென்றால் ஒருநாளும்மூப்பிளமையில்லாமல் என்றென்றைக்கும் ஒன்றுபோலேகைந்நொடிபன்னிரண்டுகொண்டது ஒருகணிதம்கணிதம்பன்னிரண்டுகொண்டது ஒருவிநாடி விநாடிஅறுபதுகொண்டது ஒருநாழிகைநாழிகை ஏழரைகொண்டது ஒருஜாமம்ஜாமம்நாலுகொண்டதும் ஒருபொழுது பொழுதுஇரண்டுகொண்டது ஒருநாள் நாள்பதினைந்துகொண்டதுஒருபட்சம் அமரபட்சம்பூர்வபட்சம் இரண்டுகொண்டது ஒருமாதம்மாதமஆறுகொண்டதுஒருஅயனம் அயனமிரண்டாகமாதம்பன்னிரண்டுகொண்டது ஒருவருஷம் வருஷம்முன்னூற்றறுபத்தஞ்சுதொண்டது தேவாதிகட்குஒருநாள் அந்தநாள்முன்னூற்றறுபத்தஞ்சு கொண்டது தேவவருஷம்ஒன்று அவ்வருடம்பதினேழுலட்சத்துஇருபத்தெண்ணாயிரங்கொண்டது கிரேதாயுகம்பன்னிரண்டுலட்சத்து தொண்ணூற்றாறுவருடங்கொண்டது திரேதாயுகம் எட்டுலட்சத்த றுபத்துநாலாயிரவருடங்கொண்டது துவாபரயுகம்நாலுலட்சத்து முப்பத்தீராயிரவருஷங்கொண்டது கலியுகம் ஆகநாலுயுகத்துக்குக்கூடியவருஷம்நாப்பத்தோர்லக்ஷத்திருநூற்றிருபதினாயிரம் இப்படிக்கொற்றசதுர்யுகம் யிரண்டாயிரவருஷஞ்சென்றால் பிரமனிக்குஒருபகல் அப்பிர்மாஒவ்வொருத்தர் நூறு நூறுவயதிறந்து கோடிபிரமதேவரிறந்து கோடிபிரமகற்பம்வருஷகாலத்திலேதேவரீருக்கு ஒருயிமைப் பிரகாரமாகக் கொண்டு க்ஷீராப்தியில்சேஷசயனத்தின்பேரிலே யோகநித்திரைசெய்து திருக்கண்விழித்து இந்தப்பூலோகத்தில் நூறுயிரயோசனைபரந்து நூறுயிரயோசனைபரந்து நூறுயிரயோசனைதெப்பாமாயிருக்கிற பூலோகத்திற்கு நூறுயிரயோசனையுயர்ந்திருக்கிற சூரியமண்டலமட்டும் புவலோகம் அப்புவலோகத்திலேயிருந்து ஆறுநூறுயிரயோசனையுயர்ந்திருக்கிறது சுவலோகம் அச்சுவலோகத்திலேயிருந்து இரண்டுகோடியோசனையுயர்ந்திருக்கிறது சனலோகம் அந்தசனலோகத்திலேயிருந்துஎட்டுகோடியோசனையுயர்ந்திருக்கிறது தபோலோகம் அத்தபோலோகததிலேயிருந்து பன்னிரண்டுகோடி யோசனையுயர்ந்திருக்கிறது சத்தியலோகம் அந்தசத்தியலோகத்திலேயிருந்து பதினாறுகோடி யோசனையுயர்ந்திருக்கிறது மஹாலோகம் அம்மேலுல கேழுக்கு கீழேழுலோக மானவையாகிய பத்மராகமயமாயிருக்கிற அதலலோகத்துக்கும் பவழமயமாயிருக்கிறவிதலலோகத்துக்கும்வைடூரியமயமாயிருக்கிறமகா

லோகத்துக்கும்மாணிக்கமயமாயிருக்கிற பாதாளலோகத்துக்கும் மரகதமாயிருக்கிற காதலலோகத்துக்கும் கோமேதகமயமாயிருக்கிற சுதலலோகத்துக்கும் நீலமயமாயிருக்கிற இராசதலலோகத்துக்கும்இப்படி சொல்லப்பட்ட அதல விதல சுதலதலாதலஇரசாதல மஹாதலபாதாளமென்கிற கீழேழுலோகமும் பூலோகம்புவலோகமும் சுவலோகமும் சனலோகமும் தபோலோகமும் மஹாலோகம் சத்தியலோகமென்றமேலேழுலோகமும் ஆக பதினாலுலோகமுங்கொண்டஒரு அண்டம் பிருதிவிக்கு ஆயிரங்கோடியண்டம் அப்புவிக்கு ஆயிரங்கோடியண்டம் ஆகாயத்துக்கு ஆயிரங்கோடியண்டம் இப்படிபல்லாயிரங்கோடி யண்டங்களுக்கு இராசாவாகஇருந்தும் அரசுரிமைராச்சியபாரஞ்செய்து தாரகப்பிரம்மாசிருஷ்டி திதிசங்காரந்திரோதயாநுக்கிரகமென்றபஞ்சகிர்த்தியங்களைநடாத்திவிளையாடி மேன்மையென்று விளங்கப்படாநின்றவரா ஆருக்குமகப்படாமல் ஆராலுமிழிவில்லாமல் இராப்பகலில்லாமல் சுகதுக்கமில்லாமல் நித்தியமாய்துரியமாய் சாட்சியாய்போதமாய்சுத்தமாய்சிவமாய்குணமாய்சோதியாய் முகூர்த்தமாய்விபுவாய்சுக்கிதமால்சலமாய்நிரஞ்சனமாய் அதீதமாய்அநாவசியமாய் நிற்குணமாய்அத்விதமாய்மோட்சமாய்இப்பேர்ப்பட்டபரமஞானவீட்டிலேயிருந்து பரமாநந்தம்விஷையாநந்தம்,முக்கியாநந்தம் வாக்கியாநந்தம், சயஞநந்தம்சூட்சிதாநந்தம் அனுவாநந்தம் பூரணாநந்தமென்கிறநந்தகங்களையநுபவித்து அழிவில்லாமலிருக்கிறதேவரீரானவர்இந்தப்பிரபஞ்சத்தைமயக்கிப்போடவேணுமென்றுஎன்தம்பியும்படைகளுமிறந்துபோனார்கள்என்பெண்சாதியைராவணன்கொண்டுபோனான்எனக்கொருதுணையுமில்லைநானுமிறந்துபோவேனென்று கன்றிறந்துகிடக்கும்போது பசுவானது எந்தப்பிரகாரம் வியாகுலப்பட்டுவாய்திரந்துகதரியழுமோஅதுபோல் தேவரீரழுகிறதைப்பார்க்கும்போது எல்லாரும்அழவல்லவோ அழுகிறீர்உமக்குத்தம்பியேது தாரமேதுஉற்றாரேது பெற்றோரேதுஉரவேதுபகையேது குணமேது தோஷமேது இராவேதுபகலேது இவைகளொன்றுமில்லாதிருக்கிற உன்னிடஅற்புதமாய்கையை அடியேனிடத்திற்காட்டாமல், சீக்கிரம்யோகநித்திரைதெளிந்துஒருவார்த்தைசொல்லவேண்டுஞ் சுவாமி ராமபத்திரா—எ—று

சொல்லென்றுரைத்தபொருளாதி தூயமறையுண்டமறைந்
துதிரிவாய், வில்லொன்றெடுத்துமிகவின்று மிருகங்கம
ங்கையுடையாய்க், கொல்லென்றுரைத்தகொலை யொன்
றுநின்று கொடியோநின்மாய்கையரிவா, ரல்லென்று
ரைத்தபகைவாதியாருனதிரேகமாய்கையறிவார்.

சுவாமி ஆதியுகாந்தகாலம்வருகிறபோது பிரமதேவன் சிருஷ்டி

க்கப்பட்ட உறும்புகடையான எண்பத்துநான்குநானூறுயிர ஜீவசெந்
துக்களெல்லாம் பிருதிவியானபூமியிலேயொடுங்கி அந்தபூமியும் அப்பு
வாகியதண்ணீரிலொடுங்கிக்கரைந்து அந்தத்தண்ணீருந்தேயுவான அக்
கினியிலேவற்றி அந்ததேயுவும்வாயுவானகாற்றில்வந்து அவ்வாயுவுமா
காயமானவெறுவெளியிலொடுங்கி இவ்வாறு ஒருபூதத்தில்ஒருபூதமொ
டுங்கி எல்லாம்ஏகமாய்பஞ்சகர்த்தாளும் பஞ்சகிர்த்தியங்களுமொடுங்கி
ஏகபரப்பிரமமாய்ரூபமில்லாமல் நிற்மலமானவெறுவெளியில் விந்து
தோன்றி அவ்விந்துவில்நாதந்தோன்றி அந்தச்சத்தத்திலேஐம்பத்தோ
ரக்ஷரந்தோன்றி அவ்வக்ஷரம்பற்பலரூபமாய் அந்தரூபத்திலேபிறந்த
சொல்லுதானே சமஸ்கிருதபாஷையிலேனோர் பகுதியாகியநிர்வாணமாக
வும் கன்னடமாகவும்மராஷ்டிரமாகவும்தெலுங்காகவும்தமிழாகவும்பற்
பலசாஸ்திரங்களாகவும்பற்பலபுராணங்களாகவும் பற்பலாகமமாகவும்
பற்பலகீதமாகப்பற்பலவேதமாக பற்பலவேதாந்தங்களாக பிறந்தவை
களிலே சொல்லப்பட்டவெல்லாம் சத்தியசொல்லிலேபொருளாகப்ப
ட்ட வெல்லாம்சிவம் அவ்வசத்தியிலேரூபமாய் எங்கும்நிறைந்துவி
ளையாடப்படாநின்றவராய்ராமபத்திராபரிசுத்தமாய் பிரசன்னத்தோ
டுங்கூடிய பூலோகத்திலேவிளங்குகின்ற இருக்குவேதம், தைத்திரிய
வேதம், சாமவேதம் அதர்வணவேதம் இன்னாலுவேதமும் ஒருகாடா
கவும் அவ்வேதாரணியத்தில் தேவரீரொருசிங்கம்போல் ஒளிந்துஒரு
த்தருக்குந் தெரியாதபடிக்குமறைந்து விளையாடப்படாநின்றஉம்மை
க்கண்டுபிடிக்கவேணுமென்றால் காமக்குரோதலோபமோகமதமாற்சரி
யமிடும்பை வேகமென்ற எண்வகைமுட்காட்டைச் சத்தியமென்கிற
வாளினாலேவெட்டி மனமென்றவெயிலிலேயுலர்த்தி ஞானமென்றஅ
க்கினியிலே அஞ்ஞானமென்ற காட்டைத்தகித்து வெட்டவெளியாக்
கினால் சிங்கமாகியஉம்மை புத்தியென்கிறவலையினால் பிடித்துககட்டிக
கொள்ளவுமக்கும் இப்படிமூலகாரணவஸ்துவாய் மூலப்பிரகிருதியாயி
ருக்கின்றதேவரீர்நாமிப்படியிருந்தால்பிரபஞ்சமாயாசொரூபமழிந்து
போமென்று திருவுளத்திலேகருதி தேவரீருடைய முக்குணமான
சுவாசத்திலேதாமசகுணத்தை ருத்திரரூபமாக்கி இரஸதகுணத்தை
பிரமரூபமாக்கிசாத்வீககுணத்தைஸ்ரீவிஷ்ணுரூபமாக்கிமகாவைகுண்
டத்திலுந் திருப்பாற்கடலாகியக்ஷீராப்தியிலும் எழுந்தருளியிருந்துதி
ருககரங்களிலேவில்வாள்கதைசங்குசக்கரமென்ற பஞ்சாயுதங்களைமே
ந்தி இடபுறத்திலேதுரோணம்வாள்கதைமூன்றும்நிற்க வலபுறத்திலே
சகஸ்திர்கோடிசந்திராதித்தர்பிரகாசத்தோடுங்கூடிநின்றுசங்குசக்கா
ம்வேலைசெய்ய பூமிதேவியும் பத்மவாஞ்சனையாகிய இலட்சுமிதேவியு
ம்பக்கங்களில்வசிக்க தேவதுந்துபிமுழங்கபீதாம்பரசேர்வையும்பீதா
ம்பரகொன்வறயும் பளபளென்றநவரத்தினகசிதமணி ப்பிரபைகிரீட

மும்வசன மாலிகாபரணகேயூரமும் துளபமாலிகாபரணகுங்குமகஸ்தம்
பகஸ்தூரிசந்தனசுகந்தபரிமள மும்தண்டையும்தளதளென்றவீரகண்
டாமணிநாதமும்கலகலென்றகிண்கிணிநாதச்சிலம்பொலிமேளமும்திவ்
யாபரணவிலாசமும் அண்டகடாகதுந்துபிதாளமும் நீலமரகதமேகம
ண்டலமேனியும் சகலதிரநாமதீபமோகனமாலையும் சதுர்வேதநாதகீத
கோஷ்டமும் சத்துருசங்கார அகோரதீரமும் மித்துருபரிபாலகாட்ச
வீட்சணமும் இப்படியிருக்கிறகோலாகலத்தோடும் பதினெழுநூறுயி
ரயோசனைவிஸ்தாரமான திருப்பாற்கடலிலே அனந்தசயனத்தில்ஞா
னதீபம்வைத்துயோகநித்திரைசெய்து லோகத்துக்கெல்லாம்படியளந்
துரட்சிக்கப்படாநின்றநாராயணரானவருந் தேவரீர்தானே அது
வுமல்லாமல் சத்தியலோகத்திலிருந்து சாவித்திரிகாயத்திரியென்று
சொல்லப்பட்டதேவிமார்களோடும் வேதவசனமாலிகாபரணம் பூண்
டு அன்னவாகனமேறி அன்னக்கொடிபிடித்து கைகளிற்றண்டுகமண்
டலமேந்திதிசைமுகத்திலுஞ்சர்வசீவாத்துமாக்களை அதனதன் அவரவ
ர்பாவபுண்ணியமறிந்து சனிப்பிக்கப்படாநின்றதர்மதேவனானவரும்
தேவரீர்தானேகைலாசத்திலிருந்து ரிஷபவாகனமேறி ரிஷபக்கொ
டிபிடித்து விபூதிபுண்டரதிரிநேத்திரசந்திர ஜடாதரகாளகண்டருத்தி
ராட்சஅரவாபரணமான் மழுசதுர்ப்புயபார்வதிகலியாணசமோலலித
லீலாவிநோதஜீவகாருண்ணியகபடநாடகசூத்ரதாரியாயிருந்து உகாந்த
காலங்களிற்சர்வசீவன்களையுஞ் சங்காரஞ்செய்யப்பட்ட உத்திரமூர்த்
தியானவருந் தேவரீர்தானேசுவர்க்கலோகத்திலிருந்து காமதேனுவும்
கற்பகத்தருவும் சுரபிசிந்தாமணியும்வந்து ஏவல்செய்ய அயிராவதமே
றி இடிகொடிபிடித்து கையில்வச்சிராயுதமெடுத்து மேனகைஊர்வசி
அரம்பைதிலோத்தமை முதலாகிய தேவப்பெண்களெல்லா மாலாத்
தியேந்தி நடினகீதபிட்சமங்கள பல்லாண்டுகூற தேவாமிர்தபானஞ்
செய்துவசந்த மண்டலத்தில் இந்திராணிசமேதராய் அமராபதியை
யாண்டிருக்கிறவருந்தேவரீர்தானேதென்கிழக்கிலேயிருந்து மேஷவா
கனமேறிஎக்கியங்களைக்கொண்டு ஸ்வாகாதேவியென்ற பெண்சாதியு
டன்கூடியிருக்கிற அக்கினிதேவனானவருந் தேவரீர்தானே தென்றி
சையிலிருந்து காலகண்டமுங்காலசூலம் காலபாசமென்கிறயாயுதங்க
ளைதரித்து பாபிஷ்டிகளையெல்லாம் நாலாயிரத்து நானூற்றுநாற்பத்தெ
ட்டுமகாவியாதிகளிற்கண்டனைசெய்தும் மேஷவாகனமேறிராச்சியபரி
பாலனஞ்செய்கின்ற இமயனானவருந் தேவரீர்தானே அவுணருக்கெ
ல்லாம் இராசனாகி தண்டிகையேறிதென்மேற்கிலிருந்து வாழ்க்கப்ப
ட்டநிருதியானவருந் தேவரீர்தானே முதலைவாகனமேறி தண்டாயுத
மெடுத்து செல்வரூபகாரணனாகி மேற்கேயிருக்கிறவருணனானவருந்தே
வரீர்தானே கலைவாகனமேறிதண்டாயுதமெடுத்து சகலபேருக்கும்பி

ராணுதாரமாகி வடமேற்கிலிருக்கிற வாயுதேவனுனவரும் தேவரீர்தா னேநரவாகனமேரிசங்கநிதிபத்மநிதிக்கதிபதியாய் வடதிசையில்புட்ப கவிமானத்தோடு அளகாபுரியிலிருக்கிறகுபேரனுனவருந் தேவரீர்தா னே ரிஷபவாகனமேறிசூலாயுத மெடுத்து வடகிழக்கிலேகைலாசபிரா தமென்கிற பட்டணத்திலிருக்கிற ஈசானியனுனவருந்தேவரீர்தானே இப்படி சொல்லப்பட்ட மகபதேவாதிகட்கும்காரணகாரியமாகி எல்லா ருந்தானுப் எல்லாருமல்லாமல் நிரஞ்சனமாயிருக்கிற இராமபத்திரா சர்வசனங்கட்கும் சிரேஷ்ட்மான இராசாக்கள் சிஷ்டபரிபாலனஞ் செய்து துஷ்டநிக்கிரகமாய் கொடியதுஷ்டரைக் கொல்லத்தக்கதாக கற்பிக்கிறவரும்நீரே, திருடப்பட்டதிரவியமும்நீரே, திருடுகிறவரும் நீரே, வெட்டுகிறவரும்நீரே, சாகிறவரும்நீரே, பிழைக்கிறவரும் நீரே சுகமும்நீரே, துக்கமும்நீரே, தாயும்நீரே பிள்ளையும்நீரேஆணும்நீரே பெண்ணும்நீரே, அலியும்நீரே, இரவும்நீரே, பகலும்நீரே, ஊணும்நீ ரே, உண்கிறவரும்நீரே, ஆக்கிறவரும்நீரே,அழிக்கிறவரும்நீரேஇப்ப டிபற்பலபேதமாகக்கொண்டு இருக்கப்படானின்றமாயாரூபங்களைஎடு த்துபூலோகத்தைமயக்கி விளையாடிப்பார்க்கின்ற தேவரீருடைய பூஷி தலலித லீலாவினோதமாயாசம்பரமவித்தையை அடியானிடத்திற்கா ட்டாமல் இருளானது சகஸ்திராமிஸன் இல்லாதவேளையில்உலகத்தை எப்படியிருட்டாக்கிவக்குமோ அதுபோல் தம்பிக்கும்படைகளுக்கும் வந்ததுக்கத்தைப்போக்க உலகபாந்தவன் உதயத்தில் இருள் நீங்கிவி ளங்குகிறதுபோல் திவ்யதிருக்கண்களைதுறந்துபார்த்து எல்லாரையும் யெழுப்பி இரட்சிக்கவேணுமல்லாமல் மகாமாய்கைகளைக் காட்டினுலு ம்உம்முடைய திருவிளையாட்டை இவடத்திலறியத்தக்க பேர்களில்லை பூமியிலேயாகிலும் பாதாளத்திலேயாகிலும் சுவர்க்கத்திலேயாகிலும் ஒருத்தர் இவடத்தில்வந்துஇந்தவியாகூலத்தை தீர்க்கத்தக்கப்பேர்களி ல்லை இராவணனைக்கொன்று தேவாதிகளை இரட்சிக்கப்பட்டபேர்களு மில்லை அதறிந்து மயக்கந்தீர்ந்து திருச்செந்தாமரை மலர்க்கண்களை த்திறந்து படைகளையெழுப்ப உபாயமார்க்கம் பார்க்கவேணும்சுவாமி ராமபத்திரா.

எழுவாயெவர்க்குமுதலாகியெல்லையிடையாகியெங்குமுள
வாய், வழுவாதவர்க்கோர்வரமீகவல்லைய வரால்வரங்க
ள்பெறுவாய், தொழுவாயுணர்ச் சித்தொடராததன்மை
யுருவாய்மறைந்துதுலையா, யழுவாயொருத்தருனேபோ
லுமாருனதிரேகமாய்கையறிவார்.

சுவாமிஇராமபத்திரா சர்வகாரியகாரணங்கட்கும் முதன்மையாக தேவரீரெப்படி சிரேஷ்டமாயிருக்கிறீரென்றுல் தேவாதிகளில் இந்தி

ரன்இருஷிகளில் அதஸ்தியன்-சமுத்திரங்களில் பாற்கடல் மலைகளில் மகாமேரு-தலங்களில் சத்தபுரி- மிருகங்களில் சிங்கம் சர்ப்பங்களில் ஆதிசேஷன் பறவைகளில் (அடியான் விருட்சங்களில் அரசுசாத்திரங்களில்வேதம் அட்சரங்களில் அகரம் மந்திரங்களில் காயத்திரி கவிகளில் மதுரகவி பொன்களில் தங்கம் ஆயுதங்களில் வில் புட்பங்களில் பாரிசாதம் நவரத்தினங்களில் மாணிக்கம் சுவைகளில் மதுரம் தொழில்களில் வேளாண்மை பதங்களில் சாயுச்சியம் பசுக்களில் காமதேனு விரதங்களில் சந்திராயனம் பூதங்களில் ஆகாயம்— நிலங்களில மருதம் விருத்தங்களில் கல்யாணி-நிறங்களில் வெண்மை வஸ்திரங்களில்பீதாம்பரம்—ஆபரணங்களில் மகுடங்கடளின்சிங்காதனம் சாதிகளில்பிராமணன் ஆச்சிரமங்களில் சன்னியாசம் பெண்களில்—பதமினி - புருஷர்களில் பாஞ்சாலன் நதிகளில் கங்கை தானங்களில் அன்னதானம் வருஷங்ளில் வெகுதானியவருஷம்— மாதங்களில் மார்கழிமாதம்—நட்சத்திரங்களில் திருவோணம் பட்சங்களில் துவாதசி— கிரகங்களில் ஆதித்தன் இராசிகளில் கேசரி-தானியங்களில் நெல் சதுரங்களில் யானை—மனிதர்களில் இராசா இப்படி சொல்லப்பட்டதெல்லாம் பூமியிலே மகதுவந்தங்கியிருக்கிறதுபோல் தேவரீர்எல்லாவற்றிற்கும் முகல்வனுகயிருந்து முதலாமுதலென்றஅடியும்நீரேநடுவும்நீரேமுடியும்நீரேஇதுமுதலென்ற சத்வகுணமும்நீரே இராசதகுணமும்நீரேதாமதகுணமும் நீரே சத்வகுணவெண்மையும்நீரே இராசதகுணபுளிப்பும்நீரே தாமதகுணகசப்பும்நீரே சத்வகுணத்திற்சாந்தமும்நீரே இராசதகுணத்தில் அகோரமும்நீரே தாமததணத்தில்மயக்கமும்நீரே சத் வகுணத்தில்வாதமும்நீரே இராசதகுணத்தில் பித்தமும்நீரே தாமகுணத்தில் சேதுமமும்நீரே சதவகுணமான பகற்காலமும்நீரே இராசதகுணமான சாயுங்காலமும்நீரே தாமதகுணமான இரவுகாலமும்நீரே சத்வகுணமான சந்திரனும்நீரே இராசதகுணமான்சூரியனும்நீரேதாமதகுணமானஅக்கினியும்நீரே இப்படி சொல்லப்பட்ட வஸ்துவுகட் கெல்லாம் தேவரீரல்லாத படிக்கு மற்றொருவரில்லை நீரே ஏக வஸ்துவாய் ஒருவராயிருந்து எங்கும் பலரூபமாக நீரேப்படி யிருக்கிறீரென்றால் ஆகாயத்திலுதிக்கிற சந்திரனொருவன் அந்த சந்திரன் பலபல பாத்திரங்களில் தண்ணீர்பலபல சந்திரனைககாணுகின்றவை போல் எங்கும் நிரந்தரப் பிரகாசமாகக்கொண்டு பலமணிகளை ஒருசரடு எப்படிச்சிதராமல்கோர்த்திருக்குமோ அதுபோலவும் எங்கும் நிரந்தரீகமாயெழுந்தருளியிருக்கிறவராய் உம்முடையவலிதலீலாவினோதம்எப்படியென்றால்பண்டாதிகாலத்தில்வழுவென்றுஒருவருக்குத்தோர்க்காமலிருந் தமதுகைஅவரென்றும் இரண்டுபேர்தேவரீருடையஇடதுகாதிலும் வலதுகாதிலும் இருந்தகுறும்பியிலே உற்பவித்து இராட்சசரூபமாய் தெய்வலோகத்

திற்புகுந்து தேவேந்திரனைத்துரத்தி அயிராவதத்தைப்பிடித்து இந்திராணியையும்பிடித்து தேவாதிகளைக்கொன்று தேவலோகத்தைச்சுட்டுப்பொடியாக்கி சத்துருவுமில்லாமல் சத்தியலோகத்திற்புகுந்து பிரமதேவனைப் பாத்தினாலெடுத்து திருப்பாற்கடலிலெறிந்து அவ்விடத்திலும்வந்துகடலைக்கலக்கி தேவரீருடனேபோர் செய்தபோது தேவரீரும்கைகளிலேபஞ்சாயுதங்களையெடுத்து எண்ணாயிரவருஷம்இரவும் பகலும் பிரியாதபடிக்குப்போர்செய்து திருவிளையாட்டாக தோல்வியடைந்தவரைப்போல் அவர்களைப்பார்த்து நீங்களிரண்டுபேரும்மஹாசௌரியமுள்ளவர்தானே உங்களுக்குநான்தோற்றேன் நீங்கள்என்னைக்கேட்டவரங்களெல்லாந் தருவேனென்று தேவரீர் திருவாய்மலர்ந்தருளிச்சொன்னபோது அந்தஇராக்ஷசர்கள்எங்களுக்குத்தோற்றுப்போனவன் நீஎங்களுக்குவரந்தரவேணுமோ நீகேட்டவரங்களை நாங்கள்தருவோமென்றுமருத்துஇவர் சொன்னபோது ஆனால்எனக்குநீங்கள்தருகிறவரம் என்சக்கரத்தில்உங்களிரண்டுபேரையும் உன்னுடைய தொடையில்வைத்துப்பிளந்துக்கொல்லவேணுமென்று வரங்கேட்க அவர்கள்சத்தியவாசகரானபடியினாலே அவ்வரத்தை உமக்குக்கொடுக்க அந்தப்படியே பேதஞ்செய்து கொன்ற கபடநாடகசூத்திரதாரியல்ல தேவரீர். அதுவுமல்லாமல் அடியேனும் என்றன்மாதாவினுடைய வயிற்றிற்பிறந்துவளர்ந்திருக்கிறகாலததில் பசிபொறுக்கமாட்டாமல் பெரும்பாற்கடலிற்போய் ஆயிரம்யோசனைவிசாலமான ஒரு ஆமையைக்கொத்திக்கொண்டு அதைவைத் துப்பட்சணஞ்செய்ய இடமில்லாமல் பறந்துவந்துமகமேருவுக்குவடபுறத்தில் ஒரு ஆலாவிருக்ஷத்தின்மீதில்கொண்டுபோய்வைத்துத்தின்னத் துவக்கினபோது அவ்வாலா விருக்ஷம் வேரோடேபறிந்துவிழ அதன்கீழேஅநேகமகா ரிஷிகளிருந்து தபஞ்செய்கிறபேர்களெல்லாம் நாராயணனுக்கபயமென்று தேவரீருக்குமுறையிட்டபோது தெவரீர்பஞ்சாயுதபாணியாய்வந்து அடியானைக்கோபித்து ஐயாயிரவருஷம் அடியானுடன் போர்செய்து தோற்றவரைப்போலே அடியானைப்பார்த்து உனக்குவேண்டிய வரங்களைத்தருவேனென்றுதேவரீர்சொல்ல அடியானுமறிவில்லாதபடியினாலே நீகேட்டவரங்களைநான்தருவேனென்று அடியான்சொல்லதேவரீருபாயத்தினாலெனக்குநீவாகனமாகவேணுமென்றுகேட்க அன்றுதொட்டு இன்றையவரைக்குந்தேவரீருக்குமாகனமாகிச் சுமந்தல்லவோ யிருக்கிறேன்அப்படிசத்துருக்களையும்மித்துருக்களை யுமசாமபேததான தண்டமானசதுர்வித உபாயங்களினாற்செயிக்கப்பட்ட கர்த்தனல்லவோ அப்படிஅயானும் தேவரீருக்குவாகனமாகித் தொழுதிறக்கிறகாலத்தில் அடியானைப்பார்த்து தேவர்களெல்லாம் தோத்திரஞ்செய்கிறார்கள்

அவர்களைஇராவணன் உபத்திரிக்கிற உபத்திரவத்தைத்தீர்க்கப்

பூமியிலே தசரதமகாராசனுக்குபுத்திரனாகி அவதாரஞ்செய்து இராவணனைக்கொண்டு பதினாயிரவருஷ ராச்சியபாரஞ்செய்துநான்வரமட்டுமிந்த வைகுந்தத்தைநீகாத்திருவென்று அடியானுடனே சொல்லிவந்தகாரணமெல்லாமறந்து ஒருமானிடனைப்போலஎன்தம்பியும்படைகளுமிறந்துபோனார்களென்று தேவரீர்மகாமாயத்தினாலழுது துக்கம்படாமற்சீக்கிரம் திருக்கண்களைத்திறந்து இவ்விஷத்தை அமிர்தமாககிபடைகளையும் தம்பியையும் எழுப்பவேணும்ஸ்வாமிராமபத்திரா தேவரீர்விளையாடுகிறதிருவிளையாட்டி வின்னமொருவிசித்திரமான விளையாட்டுண்டு அதெப்படியென்றால் பொல்லாதவர்களுக்கு நல்லத்தைக்கொடுக்கிறதும்நல்லவர்களுக்குப் பொல்லாங்கைக்கொடுக்கிறதும் சிஷ்டசனங்களைச்சிட்சைசெய்கிறதும் துஷ்டசனங்களை இரட்சிக்கிறதும்பிலவான்களை செயிப்பிக்கிறதும் பிலவான்களை பிலவான்களிடத்தில்தோல்வியடையச்செய்கிறதும் பிலஈனரிடத்தில் தோற்கச்செய்கிறதும் இப்படியொன்றற்கொன்று மாறுபாடாகச் செய்விக்கிறதும்சுவாமிக்குத்திருவிளையாட்டு இந்ததிருவிளையாட்டெல்லாம் அடியான்கண்டேன்சுவாமிராமபத்திரா—எ—று.

எறிந்தாருமேறுபடுவாரு மின்ன பொருள்கண்டிரங்கியானுசற், செறிந்தாரின்மேன்மையெனலாய தன்மைதெரிகின்றதும்மையிடையே, பிறந்தார்பிறந்த பொருளோடுபூதிபிரியாதுநின்றபிறவி, யறிந்தாரறிந்த பொருளாதியாருனதிரேகமாய்கையறிவார்.

பொல்லாததுஷ்டனானஇந்திர சித்தானவன்வந்து நாகபாசத்தினாலேயெறிந்துதம்பியையும்படைகளையுங்கொன்றதும் நாக பாசத்தைதடுக்கமாட்டாமல்தம்பியையும்படைகளையுஞ்சாய்ந்து இன்ன மிப்படிவந்தகாரியத்தைக்கண்டுபயந்து தேவாதிகள் துக்கிக்கிறதுக்கமுமஉம்முடைய கற்பனையினாலே வந்ததல்லவோ அதெப்படியென்றால் நாகபாசங்கொடுத்து படைகளையுங் கொல்லத்தக்கதாக இந்திரசித்திடத்திலேயிருந்து சௌரியத்தைக்கொடுத்தவரும் நீரே இவை யெல்லாம் காண்பித்து சிவன்பிரம்மா இந்திராதிகளை துக்கிப்பிக்கிறவரும்நீரே அதெப்படியென்றால் சூத்திரதாரியானவன் சூத்திரகயிற்றினாலே சூத்திரப்பாவையை யெடுத்தாட்டினாலாடும் அவன் ஆட்டாதேபோனாலந்தபதுமைகிடந்தவிடத்திலேகிடக்கும்அதுதானேயாடமாட்டாது அதுபோல இந்திரசித்துக்கும் உம்முடைய அனுக்கிரகமில்லாமல் நாகபாசத்தொடுக்கத்தக்கினதில்லை இப்படி வந்ததெல்லாந் தேவரீரதுகற்பனையினால் வந்ததல்லாமல் மற்றொன்றுமில்லைஎறிகிறவருநீரேஎறிபடுகிறவர்நீரேஎறியவேண்டா மென்கிறவருநீரே இப்படிபலவிதமாக செருக்கினிசை

ந்து சத்துருவும் மிகதுருவம் மித்துருவும் சரி யாய்விசனத்திற்குஞ்சந்
தோஷத்திற்குஞ் சுகத்திற்கும்துக்கத்திற்கும் பூமிக்கும் ஆகாயத்திற்
கும் இருளுக்கும்மின்னலுக்கும் இரவுக்கும்பகலுக்கும் மகத்துக்கும்
பூரத்துக்கும் இடதுக்கும் வலதுக்கும்நரகத்துக்குஞ் சுவர்க்கத்துக்கு
ம்சனனத்திற்கும்உஷ்ணத்திற்குஞ்சீதளத்திற்கும்ஞானத்திற்கும்அஞ்
ஞானத்திற்கும்நாட்டுக்குங்காட்டுக்கும் பத்திக்குஞ்சுத்தத்திற்கும்அசு
த்தத்திற்கும் சரத்திற்கும் அசரத்திற்கும்அருளுக்கும் நாலுக்குஞ்சத்
யயத்துக்கும் அசயத்தியத்திற்கும் காலத்திற்கும் அகாலத்திற்கும் உ
யிததியத்திற்கும் இரக்கத்திற்கும் காரணத்திற்கும் அகாரணத்திற்கும்
காரியத்திற்கும் அகாரியத்திற்கும் செயத்திற்கும் அபமெசயர்திற்கும்
மோகத்திற்கும் அமோகத்திற்கும் விவேகத்திற்கும்அ விவேகத்திற்கு
ஞ்சாஸ்திரத்திற்கும் அசாஸ்திரத்திற்கும் தத்துவத்திற்கும் அதத்து
வத்திற்கும் அதத்துவத்திற்கும் இரக்ஷக்குஞ் சிரக்ஷைக்கும் மானத்
திற்கும் அபமானத்திற்குஞ்சுரருக்கும் அசுரருக்குந்துஷ்டருக்கும் இஷ்
டருக்கும்நன்மைக்கும்தீமைக்கும்பாவத்திற்கும்புண்ணியத்திற்கும் இ
ன்னமிப்படிசொல்லப்பட்டவைகட்கெல்லாந்தேவரீருடையவராகிசர்வ
ஜீவாத்துமாக்களையும்ஒன்றா போலபார்த்தீரானால் இப்பிரபஞ்சம்நடவா
துபுவனதிரயங்களுமறியபிரபஞ்சமவர்த்திக்க வேணுமென்றுதன்மை
முன்னிலைப்படர்க்கையைக்கற்பித்துபசுபதிபாசங்களிலேவந்தித்து அ
வ்வவ்வருணாச்சிரமங்களில் நிறுத்திபாவபுண்ணியங்களை யறிவித்து ம
னம் புத்திசித்தம்அகங்காரங்களைக்கொடுத்துநன்மைசெய்தவர்க்கு நன்
மையைக்கொடுத்து தீமைசெய்தவர்க்கு தீமையை க்கொடுத்து தானெ
ன்ற ஆணவங்கொண்ட கோபிரகாரதுஷ்டர்களை சம்மாரஞ்செய்து சி
ஷ்டபரிபாலனஞ்செய்தால் இந்தப்பிரபஞ்சம் வர்த்திக்காதென்று தே
வரீர்என்னதொழிற் செய்தீரேன்றால் தேவரீர் மூலப்பிரகிருதியிலடங்
கியிருக்கிற சீவாத்துமாக்களும் ஸ்ரீசனத்தில்இலிங்கத்தோடுங் கார
ணசரீரத்தை எடுத்துப் பின்று சூக்ஷ்மசரீரமெடுத்து இவ்விரண்டுசரீர
முந்தேவரீரேபிரியாமலிருந்து ஸ்தூலசரீரமெடுக்கவேண்டிஉம்மைப்
பிரிந்துவாயுரூபமாகவந்து ஸ்ரீயும்புருஷனும் புணருகிறபுணர்ச்சியிலே
ஸ்ரீயினுடைய கர்ப்பத்தி லிருக்கிற சோணிதத்தில் புருஷனுடையலி
ங்கத்திலிருந்து பாய்ந்தவிந்துவில் ஆத்மாவானதுகலந்துமபிர் நுதிப்பிர
மாணமான இருபததோர்சுழிக்கு நடுவே அவ்வென்றும் அக்ஷரம் அ
ங்குதித்து ஓங்காரங்கொண்டுவளைக்க அறுகம்புல்லினுனியின்பனித்து
ளிபோற் கலந்து ஏழுநாள்மட்டும் தண்ணீரும் எண்ணெயும்போலக்கூ
டியுங் கூடாமலும் நின்றுபதினாலாநாளானபோது சோணிதமுஞ்சுக்
கிலமும்ஒன்றுப்பக்கூடியிறு கிமெழுகுபேதமாய்த்திரண்டு இருபத்தோ
ராநாள் அண்டம் போலுருண்டுமுதல்மாதத்தில் மாங்கிஷமும் இரத்த

முழுண்டாகி இரண்டாமாதத்தில் தலைகழுத்து இடுப்பு முதுகு இவைக் ளுண்டாகி மூன்றுமாதத்தில் கரசரணங்களுண்டாகி நான்காமாதத்தில் நரம்புண்டாகி ஐந்தாமாதத்தில் முகம்கண்மூக்கு செவிவாய்உண்டாகி ஆறுமாதத்திற் பல்லீறுண்டாகி ஏழாமாதத்தில் நவத்துவாரமுஞ்சீவ னுமுண்டாகிதாயுண்ட அன்னசாரங்கொப்பூழ்வழியேசென்றுபிள்ளை க்குஉடல்பருத்து எட்டாமாதத்தில் பிராணன்படர்ந்து ஒன்பதாமாத த்தில் தன்னையறிந்து ஊண்உணர்ச்சியும் பத்தாமாதத்தில் அக்கினிக் குண்டத்திலிருந்து வருத்தப்படுகிறது .போல் வருத்தமறிந்துசெக்கி லே திரிகைஎப்படி நெரியுமோ அப்படிஉபஸ்வழியாய் தனஞ்சயனு தைத்துத்தள்ள காவாவென்ற அழுகுரலுடன் பிறந்து அழுதுண்டு வ ளரநரம் பாகி வைசிரசிம் ஏழாயிரஞ்செவியில் முந்நூறுகண்ணில்நாலா யிரம்மூக்கில்மூவாயிரத்து முந்நூற்றறுபதுபிடரிலுந் தோலும் ஆறுபி சங் கண்டத்தில் ஆயிரங்கதையில்மூவாயிரந்தொண்டைக்குங்கீழ்கொப் பூழுக்குமேல் ஒன்பதினாயிரத்துப்பதினாறுபிடரிக்கீழ் (2000) விலாவி ல்(3000 கோசத்தில்(1000) மூலத்தில்(3000) முலைச்சந்தில்இரண்டாயி ரம்வயிற்றில் ஆயிரத்தறுநூற் றைம்பத்துநாலு இன்னமிங்ஙனம் எழு பத்தீராயிரம்நரம்பும் அதிற்பிரதானநாடி மூன்றுமூன்றரைகோடிரோம ததுவாரமும் உப்புபலம் இரண்டு மூன்றுநாழி பித்தம்நாளுழிற் சேஷ் மம் நாளுழி யுதிரமும் ஆழாக்குசுக்கிலம் முப்பத்திரண்டு சிறு சா ண்குடலும் எட்டுசாண் பெரு குடலும் எட்டுபலம் ஈரல் தாமரை மொட்டுக்காய்ஐந்துகழஞ்சுமூக்கும்நாற் கழஞ்சுகன்னமிரண்டும்நாற்க ழஞ்சுகண்களும் ஒருரிசிறும்நாற்பலமலவழுக் கையும்நாற்கஞ்சுபிச்சும் ஆறுபலம்நிணமும் ஐங்கழஞ்சுவையும்எட்டு பலங்கெந்தகமும்நூற் றுறுபலம்தோலும் இருநூறுபலம்மேதையும்நூற்றுமூன்றுபல மாங்கி ஷமும் பதினாறுபழவெலும்பும் பன்னிரண்டுகோர்வை முதுகுதண் பெலும்பும் உதிரமாங்கிஷமே தையத்திதசைமூளைசுக்கிலம் சத்தசா து முப்பத்திரண்டு பலமும் மூன்றுபல ஜலேந்திரமும் ஒன்பதுதுவார மும் முப்பத்திரண்டுறுப்பும்இருபதுவிரலும எண்சாணீளமும்நாற்சா ண்பருகனும் எழுத்தெருவும் எட்டுத்தூணும் முப்பதுசந்தும் எழுப துபேரேலும்பும்இடுப்பில்முச்சாணெலும்பும் மூச்சாண்சதையும் நூற் றெட்டுகோடிஉரோமமும்முன் நூற்றேழுபலங்குடலும்நொருக்கெலும் புபூட்டெலும்புமுன்கையிரட்டையெலும்பும் ஆகஎலும்பெல்லாம்நூற் றொருபலமும்இறைச்சியெல்லாம்நூற்றறுபத்தைந்துபலமாகவும் இப்ப டிதொண்ணூற்றாறுதத்துவத்தில்மாமிசந்தோல்அஸ்திநரம்புமயிர் இவ் வைந்தும்பிருதிவியின்கூறாகவும்ஜலம்நிணம்சுலக்கிலம்மூளை இரத்தம்இ வ்வைந்தும்அப்புவியின்கூறாகவும் பசிசோம்பல்பயம் நித்திரைமைதுன ம்இவ்வைந்தும்தேயுவின்கூறாகவும் நிறுத்தல்போதல்கிடத்தல்ஓடல் ஆ டல்இவ்வைந்தும்வாயுவின்கூறாகவும் காமம்க்ரோதம்லோபம்மதம்மாற்

சரியம்இவ்வைந்தும் ஆகாயகூறுகவும் பிருதிவிநாசியில் அப்புநாவில் தேயுகண்ணில் வாயுஉடலெங்கும் ஆகாயஞ்செவியில் பிருதிவிநங் அப்புமங்கேயுசிங்வாயுவங் ஆகாயம் யங்பிருதி விபொன்னிறம் அப்புபளிங்கு நிறம்தேயுசெம்புநிறம் வாயுகறுப்புபச்சைநிறம் ஆகாயம்புகைநிறமாகவும்நாழிகைஒன்றுக்குமுந்நூற்றறுபது சுவாசமும்நாளொன்றுக்கிருபத்தோராயிரத்தறுநூறுசுவாச முஞ்சாயாபுருஷதெரிசனம்போன்ற அறியாதஆத்மா விராட்புகுந்தபரிபின்னபூட்சி யையெடுத்துமாயாந்தகாரமோகவலையிலகப்பட்டு வியாதிகளில்லை துலைந்துகாலன் கையிற்கட்டுண்டிறந்து போகாமல்உம்முடைய ரூபங்களை யுணர்ந்திருக்குஎசுர்தம்ம இருக்கு அதர்வணமென்றநாலுவேதத்தையுமறிந்துமந்திரமாவியாகரணம் நிகண்டு சந்தோபிசிதம்நிருத்தம்சோதிருஷம்என்றுசொல்லப்பட்டஆறுசாஸ்திரங்களையறிந்துவானகம்நயாயிகம்வை சேடிகமலோகாயுதம்மீமாஞ்சை வருககமென்றுசொல்லப்பட்ட சட்சமயங்களையறிந்துணர்ந்து அணிமாசிததிமகிமாசித்திலகுமாசித்திகிரிமாசித்திபிரத்தியமாசித்திபிரகாமியசித்திவிசுத்துவசித் திவசுத்துவசித்தியென்றுசொல்லப்பட்டஅஷ்டமாசித்திகளைத்தெளிந்து அஷ்டாங்கயோகங்களைதெளிந்து பிரம்மவைணவம் சைவம்பாகவதம் பௌடிகம் பிரமாண்டம் அக்நேயம்மச்சியம்கூர்மம்வராகம் வாமனம்இலிங்கம்நாரதீயம்காருடம் பிரமகைவர்த்தம் ஸ்காந்தம்மார்க்கண்டேயம் பதுமமென்றுசொல்லப்பட்ட அஷ்டாதசபுராணங்களினுடைய அர்த்தங்களையறிந்துபிருதிவிஅப்புதேயுவாய்வுஆகாயமென்ற பஞ்சபூதங்களைக்கண்டு ஸோத்திரம்தொக்குசட்சுசிங்குவை ஆக்கிராணமென்ற ஐம்புலன்களைக்கண்டு வசனம்கெவனம்தானம் வியாக்கமானந்தமென்ற ஞானேந்திரியங்களையறிந்து இர்த்தம்மாங்கிசம் மச்சைமேதை அஸ்திசுக்கிலம் மூளைஎன்றசத தாதுகளை யறிந்து மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அநாகதம்விசித்தியாஞ்ஞையென்ற யாறுதாரத்தையறிந்து இடகலைபிங்கலைசுழிமுனை காத்தாரிசிங்குவை அலம்புடைசங்கினிகுகு அத்திபுருடன் என்றதசநாடிகளையறிந்து பிராணன் அபானன் உதானன்வியானன் சமானன்கூர்மன் நாகன்கி ருதரன்தேவதத்தன் தனஞ்செயனென்ற தசவாய்வுகளை யுணர்ந்துகாமக்குரோதலோபமோக மதமாற்சரியவிடும்பை வேகமாகியஎண்வகைக் குற்றங்களை யடக்கி அன்னமயம் பிராணமயம்மனோமயம் விஞ்ஞானமயம்என்கிறபஞ்சமயகோசங்களையறிந்தும்மனம்புத்திசித்தம்பாஙகாரமென்றநான்குகாரணஙகளைக்கடந்துசாக்கிரம்சொப்பனஞ் சுழுத்திதுரியந்துரியந்துரியா. தீதமென்றவைகளைக்கடந்துவாதபித்தசேட்டமமென்றமூவியாதிகளைத் தள்ளிஇராஜஸதாமதஸாத்வீ கமென்றமுக்குணஙகளைக் கடந்து அக்கினிமண்டலம்யாதித்தமண்டலம் சந்திரமண்டலம்என்ற மும்மண்டலஙகளையறிந்து நல்வினைதீவினையைத்தள்ளி அறிவென்ற சத்தசைதந்நியஞான

போதத்தையறிந்து திவ்யஞானக்கண்ணினாலே உம்மைக்கண்டு மனதில்தியானித்து வாக்கினால்வசனித்து ஸ்தௌத்திரஞ்செய்து சிரசில்வணங்கியிருக்கிற மஹாத்மாக்களையறிந்து உம்முடைய மஹாமாயத்தைக் காட்டாதபடிக்கு சீக்கிரமுணரவேண்டுஞ்சுவாமி ராமபத்திரா—எ—று

தானந்தமென்றுபலவென்றுமொன்றுதனினின்றுதானு
தவியே.ஞானந்தொடர்ந்தசுடரென்றுமூன்றுநயனங்கந்
தடவிழியாய், மானந்தொடர்ந்தமதமென்றுமாய்கைம
றைநான்குவந்துமறியா, ரானந்தமென்றும் யாருனதி
ரேகமாய் கையறிவார்,

